மறுத்ததைப் பற்றி இங்கே பேசக் கூடாது என்று பல முறை சொல்லியிருக்கிறேன். பேசக் கூடாது, உட்காருங்கள். என் கவனத்திற்கு கொண்டு வந்தபோது நான் அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடு) என்னுடைய அறையில் வந்து கேளுங்கள். நிறைய விளக்கம் சொல்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு.கே. கந்தசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு.கே. கந்தசாமி. திரு.கே. கந்தசாமி இருக்கையில் இல்லை.

மதுரை, காமராஜர் சாலை-இராமநாதபுரம் நெடுஞ்சாலையில் இரு புறமும் மண் மேடிட்டுள்ளதால் அடிக்கடி சாலை விபத்துக்கள் ஏற்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு.ஓ.எஸ். அமர்நாத் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஓ.எஸ். அமர்நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மதுரை, காமராஜர் சாலை-இராமநாதபுரம் நெடுஞ்சாலையில் இருபுறமும் மண் மேடிட்டு அடிக்கடி சாலை விபத்துக்கள் ஏற்படுவதால் பொது மக்களுக்கு ஏற்படும் இன்னல் குறித்து" மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.(குறுக்கீடு).

முற்பகல் 11-10

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை மீண்டும் எழுப்புதல்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிசாமி, உட்காருங்கள். என்னிடத்தில் விளக்கம் கேட்க வேண்டுமென்றால் அறையிலே வந்து கேளுங்கள். இந்தமாதிரிக் கேட்பது முறையல்ல.

திரு. ஜி. பழனிசாமி: ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன், தொகுதிப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குத்தான் நான் அனுமதி மறுத்திருக்கிறேன். இன்று எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால், இந்தப் பிரச்சினையைப் பற்றியும் பேசலாம் என்று சொல்லி அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் (குறுக்கீடு) இது சரியல்ல. பலமுறை உறுப்பினர்களுக்கு என்னுடைய வேண்டுகோளாகத் தெரிவித்திருக்கிறேன், நான் அனுமதி மறுத்த பிரச்சினையை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள் என்று கூறியிருக்கிறேன். இங்கே கேட்பதை நான் அனுமதிப்பதற்கு இல்லை. (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்ததை இங்கே பேசுவது முறையல்ல. முறையில்லாமல் பேசிக் கொண்டேயிருந்தால் என்ன செய்வது ?

திரு. ஜி. பழனிசாமி : எல்லாவற்றையும் மறுத்தால் நான் என்ன செய்வது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் எல்லாவற்றையும் மறுத்தேன் என்றால் மறுத்ததுதான். மறுத்தால் இங்கே பேச முடியாது, என்னுடைய அறையிலே வந்துதான் அதைக்கேட்க முடியும். உட்காருங்கள். (குறுக்கீடு) இன்று எடுப்பதற்கு இல்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன், உட்காருங்கள்.

3. கவன ஈர்ப்பு —தொடர்ச்சி.

மதுரை, காமராஜர் சாலை-இராமநாதபுரம் நெடுஞ்சாலையில் இரு புறமும் மண் மேடிட்டுள்ளதால் அடிக்கடி சாலை விபத்துக்கள் ஏற்படுவது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது:

அறிக்கை.

சட்டமன்றப் பேரவை உறுப்பினர் குறிப்பிட்டுள்ள தேசிய நெடுஞ்சாலை 49-ல் கி.மீ.3/2-5/4வரை, வீரகனூர் கிராமம் அமைந்துள்ள இப்பகுதியில் (நகர்ப்புறம்) சாலையில் இரு மருங்கிலும் படிப்படியாக ஏற்பட்ட மணல்